## 2.109 ஊராட்சி ஒன்றியப் பணியிலிருந்து பணிமாற்றல் முறையில் இளநிலை உதவியாளர் / இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் / இரண்டாம் நிலை ஊர்நல அலுவலர் / காசாளர் / தட்டச்சர் பதவிகளில் பணி அமர்த்துதல்

---

ஊரக வளர்ச்சி (இ5) துறை

அரசாணை (நிலை) எண். 189 நாள் : 10.6.1997

படிக்க :

1. ஊரக வளர்ச்சித் துறையின் 963 எண்ணும் 28.11.90 நாளும் இட்ட நிலை அரசாணை.
2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் 1532/90/6சி எண்ணும் 13.12.90 மற்றும் 6.8.91 நாள்கள் இட்ட கடிதங்கள்.
3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 3783/இ4/92 எண்ணும் 25.2.93 நாளும் இட்ட கடிதம்.
4. பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறையின் 43 எண்ணும் 15.2.94 நாளும் இட்ட நிலை அரசாணை.

**ஆணை**

தற்போதிருக்கும் தமிழ்நாடு அமைச்சுப்பணியின் சிறப்பு விதிகள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் 963 எண்ணும் 28.11.90 நாளும் இட்ட நிலை அரசாணை ஆகியவற்றின்படி ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர், இரண்டாம் நிலை ஊர்நல அலுவலர் மற்றும் காசாளர் பதவிகளில் நேரடி நியமனம் மூலம் பணியமர்த்த வேண்டிய காலிப்பணியிடங்களில் 10 விழுக்காடு ஊராட்சி ஒன்றிய பதிவுரு எழுத்தர்களை பணிமாற்றல் மூலம் பணி அமர்த்த ஒதுக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய அலுவலக உதவியாளர்கள் தங்களையும் இளநிலை உதவியாளர், காசாளர், இரண்டாம் நிலை ஊர்நல அலுவலர் பதவிகளில் பணி அமர்த்த வேண்டும் என்று கேட்டுள்ளனர். இது குறித்து தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்து ஆய்வு செய்யப்பட்டது. ஊராட்சி ஒன்றிய பதிவுரு எழுத்தர்களை இளநிலை உதவியாளர், இரண்டாம் நிலை ஊர்நல அலுவலர் மற்றும் காசாளர் பதவிகளில் பணி மாற்றல் மூலம் பணி அமர்த்த ஒதுக்கப்பட்டுள்ள 10 விழுக்காட்டில் தகுதியுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலக உதவியாளர்களையும் பணி அமர்த்தலாம் என்றும் அதற்கு ஏற்ப தமிழ்நாடு அமைச்சுப் பணியின் சிறப்புவிதிகள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் 963 எண்ணும் 28.11.90 நாளும் இட்ட நிலை அரசாணை ஆகியவற்றுக்கு திருத்தம் வெளியிட வேண்டுமென்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் கருத்து தெரிவித்துள்ளது.

2. இரவுக் காவலர், தையல் ஆசிரியைகள் (ஊரக மகளிர்நல அமைப்பாளர்கள்) போன்ற வகைப் பணியாளர்களையும் இளநிலை உதவியாளர்/ தட்டச்சர்/ இரண்டாம் நிலை ஊர்நல அலுவலர்/ காசாளர் பதவிகளில் பணி அமர்த்துமாறு அரசுக்கு கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.

3. இளநிலை உதவியாளர்/ இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் / தட்டச்சர் பதவிகளில் பணி மாற்றல் மூலம் பணி அமர்த்துவது குறித்து தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாயம் அளித்துள்ள சில தீர்ப்புகளுக்கு ஏற்றவாறு பார்வை 4–ல் குறிப்பிட்டுள்ள அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள நெறிமுறைகளை கருத்தில் கொண்டு, பார்வை 1–ல் குறிப்பிட்டுள்ள அரசாணையை மறு ஆய்வு செய்து அரசு தற்போது கீழ்கண்டவாறு திருத்திய ஆணைகள் வெளியிடப்படுகின்றது.

4. மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் / இரண்டாம் நிலை ஊர்நல அலுவலர் மற்றும் காசாளர், தட்டச்சர் ஆகிய வகை பதவிகளில் ஒவ்வொரு வகையிலும் நேரடி நியமனம் மூலம் பணி அமர்த்த வேண்டிய காலிப்பணியிடங்களில் 10 விழுக்காடுகளுக்கு மிகாமல், பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர் போன்ற வகை அரசுப் பணியாளர்களுடன் ஊராட்சி ஒன்றிய பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர், மகளிர் நல அமைப்பாளர்கள், தையல் ஆசிரியைகள் போன்ற வகை பணியாளர்களையும் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, பணி மாற்றல் மூலம் பணி அமர்த்தலாம் என அரசு ஆணையிடுகிறது.

அ) அலகு அலுவலரின் (Unit Officer) கட்டுப்பாட்டில், தமிழ்நாடு அமைச்சுப் பணி அல்லாத அதைவிட குறைந்த நிலையில் உள்ள பதவி உயர்வு வாய்ப்புகள் இல்லாத அல்லது ஒரு முறை பதவி உயர்வு பெற்ற பின்னரும் இளநிலை உதவியாளர்/ இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் / காசாளர்/ இரண்டாம் நிலை ஊர்நல அலுவலர் பதவிக்கான சம்பள விகிதத்தைவிட குறைந்த சம்பள விகிதம் பெறும் பணியில் இருப்பவர்களாகவும் அவர்கள் இருக்க வேண்டும்.

ஆ) நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வி தகுதிகள் அனைத்தும் பெற்றிருக்க வேண்டும்

அல்லது குறைந்த பட்ச கல்வி தகுதிபெற தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இ) இளநிலை உதவியாளர்/ இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர், இரண்டாம் நிலை ஊர்நல அலுவலர், காசாளர் மற்றும் தட்டச்சர் பதவிகளில் பணி மாற்றம் மூலம் பணியமர்த்தப்படுவர். அதைவிட குறைந்த நிலை பணிகளில் 7 ஆண்டுகளுக்கு குறையாமல் தொடர்ந்து பணியாற்றிருக்க வேண்டும்.

ஈ) எழுத்தர் பணியுடன் தொடர்பில்லாத அலுவலக உதவியாளர், இரவு காவலர். தையல் ஆசிரியைகள் போன்ற வகைப் பணியாளர்களை பணிமாற்றல் மூலம் இளநிலை உதவியாளர் / இரண்டாம் நிலை ஊர்நல அலுவலர்/ காசாளர் பதவிகளில் பணி அமர்த்தும் முன்னர். அவர்கள் தங்களது பணி தொடர்பான பணிகளுக்கு குந்தகமில்லாமல்குறைந்த பட்சம் ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் வீதம் ஒரு ஆண்டு காலத்திற்கு எழுத்தர் பணியில் (அதாவது பதிவுறு எழுத்தராகப்) பயிற்சி பெற்றிருக்க வேண்டும். தட்டச்சராக பணி அமர்த்தப்படுவதற்கு, இந்தப் பயிற்சி தேவையில்லை, ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி அளிக்க வேண்டியவர்கள் பட்டியலை, பணிமூப்பின் அடிப்படையில் முன்னதாகவே தயாரிக்க வேண்டும், ஒதுக்கீட்டை கருத்தில் கொண்டு தேவைக்கு மிஞ்சிய எண்ணிக்கை நபர்களுக்கு பயிற்சி அளிக்கக்கூடாது.

உ) தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி, தமிழ்நாடு கல்வி சார்நிலை பணி போன்ற பிறவகை பணிகளில் ஏற்கெனவே இளநிலை உதவியாளர்/ இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர்/ தட்டச்சர் பதவிகளுக்கு இணையான ஊதிய விகிதத்தில் பணியாற்றுபவர்களை பணி மாற்றல் மூலம் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பணி அமர்த்த கூடாது.

ஊ) பணிமாற்றல் மூலம் பணி அமர்த்தப்படுவோர் முதலில் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பணி அமர்த்தப்பட்டவராக இருக்க வேண்டும்.

எ) ஊரக வளர்ச்சித் துறையின் 963 எண்ணும் 28.11.90 நாளும் இட்ட அரசாணையில் ஏற்கெனவே ஆணையிட்டுள்ளவாறு, பணிமாற்றல் மூலம் பணி அமர்த்தப்படுவதற்கான தகுதி வாய்ந்தோர் பட்டியலை மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு தயாரித்து, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெற்ற பின்னர் பணியமர்த்த வேண்டும். அப்படி இசைவு பெறும் முன்னர் தற்காலிகமாக எவரையும் பணியமர்த்தக் கூடாது.

ஏ) தகுதி வாய்ந்தோர் பட்டியல் தயாரிக்கும் பொழுது முந்தைய நன்னடத்தை. பெற்றிருக்கும் தண்டனைகள், நிலுவையில் இருக்கும் குற்றச்சாட்டுகள் போன்றவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்.

ஐ) அனைத்து தகுதிகளும் ஒரே போன்று இருக்கும் நிலையில், அவர்கள் வகிக்கும் பதவியில் சேர்ந்த நாளின் அடிப்படையிலான பணி மூப்பை தவறாது கடைபிடிக்க வேண்டும்.

ஒ) தகுதி வாய்ந்தோர் பட்டியலை ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31–ம் நாளுக்குள் தேர்வாணையத்திற்கு அனுப்பவேண்டும். பிப்ரவரி 28–ம் நாளுக்குள் தேர்வாணையம் இசைவை தெரிவிக்க வேண்டும். இசைவு பெற்ற பட்டியலை மாவட்ட ஆட்சியர் வெளியிடவேண்டும்.

ஓ) பதிவுரு எழுத்தர், அலுவலக உதவியாளர், இரவு காவலர், தையல் ஆசிரியைகள் போன்றவகை பதவிகளிலிருந்து பணிமாற்றல் மூலம் இளநிலை உதவியாளர்/ இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர்/ இரண்டாம் நிலை ஊர்நல அலுவலர்/ காசாளர் பதவிகளில் பணி அமர்த்தப்பட்டவர்கள், அவ்விதம் பணி அமர்த்தப்பட்ட பின்னர், பவானிசாகரில் உள்ள குடிமைப் பணிகள் பயிற்சி நிலையத்தில்அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் கால அளவுக்குள் பயிற்சி பெற வேண்டும்.

ஔ) பதிவுரு எழுத்தர் பதவிக்கு நேரடி நியமனம் செய்யக்கூடாது.

**5.** இது தொடர்பாக தமிழ்நாடு அமைச்சுப்பணியின் சிறப்பு விதிக்கு திருத்தம் தனியாக வெளியிடப்படும் எனவும் ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ்.நாராயண்**
அரசு செயலாளர்